00021

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2020/2021

இறுதிப்பரீட்சை

**EPD3232/ESD1132** – கலைத்திட்டக் கற்கையும் செயற்பாட்டு அழகியல் மற்றும் புத்தாக்கச் செயற்பாடுகளும்

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- 15.07.2023 நேரம்: மு.ப. 09.30 - மு.ப 11.30

- பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி - I

1. "அழகியல் எனும் பதத்தினால் நீர் கருதுவது யாது?
2. சிறுவர் சித்திரம், வயதுவந்தோர் சித்திரம் ஆகியவற்றிற்கு இடையிலான முக்கிய வேறுபாட்டை குறிப்பிடுக.
3. கதை கூறலின் அனுகூலங்கள் இரண்டினை (02) சுருக்கமாக விளக்குக.
4. பன்முக நுண்ணறிவுக் கொள்கையின் எட்டு (08) விடயங்களை பட்டியலிடுக.
5. முன்பள்ளிக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் "பொம்மைகள்" பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை சுருக்கமாக பகுப்பாய்வு செய்க.
6. இசையும் அசைவும் ஊடாக விருத்தி செய்ய கூடிய திறன்கள் நான்கு (04) குறிப்பிடுக.
7. பிள்ளைகளுக்கு ஆரம்ப காலங்களில் வெளிப்புறக் 'கற்றல் சூழல் இருப்பதன் அனுகூலங்கள் மூன்றினை (03) விளக்குக.
8. பேரணர் மூன்று (03) கற்றல் முறைகள் அல்லது கற்றல் செயற்பாட்டு வழிகளை அறிமுகப்படுத்தியுள்ளார்" அம்மூன்று (03) கற்றல் முறைகளை குறிப்பிடுக.

**(5 X 8= 40** புள்ளிகள்)

## பகுதி - II

9.

**i.** ஹோவார்ட் கார்டினரின் பன்முக நுண்ணறிவுக் கோட்பாட்டை சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

**ii.** பிள்ளைகளிடத்தில் இசைசார் நுண்மதியை உருவாக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்களை பகுப்பாய்வு செய்க.

(12 புள்ளிகள்)

10.

i. முன்பள்ளி ஆசிரியரால் பிள்ளைகளின் பொருட்டு அழகியல் செயற்பாடுகள் திட்டமிடப்படும் போது கருத்திற் கொள்ள வேண்டிய முக்கியமான விடயங்கள் **நான்கினை** (04) விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. "முன்பருவப் பிள்ளைகளின் விருத்தியில் கதை கூறலும் நாடகமும் முக்கியத்துவம் வாய்ந்தவை" இக்கூற்றை உதாரணங்களுடன் ஆராய்க.

(10 புள்ளிகள்)

11.

i. புத்தாக்க செயற்பாடுகளின் பொருட்டு பயன்படுத்தக் கூடிய கழிவுப் பொருட்கள், இயற்கைப்பொருட்கள் **பத்தினைப்** (10) பட்டியலிடுக.

(05 புள்ளிகள்)

ii. முன்பள்ளி மற்றும் ஆரம்ப கல்வியில் புத்தாக்க செயற்பாடுகளின் பொருட்டு கழிவுப்பொருட்களை பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை விளக்குக.

(15 புள்ளிகள்)

12.

i. தொடர்பாடல் எனும் பதத்தால் நீர் கருதுவது யாது? சுருக்கமாக விபரிக்குக.

(08 புள்ளிகள்)

ii. "ஆரம்பப் பிரிவு ஆசிரியர் முன்பிள்ளைப் பருவத்தினரிடம் கற்றல் முறைகளை ஏற்படுத்தும் போது வேறுபட்ட தொடர்பாடல் முறைகளை கையாள வேண்டும்." நீங்கள் ஆரம்பப்பிரிவு ஆசிரியர் என்ற வகையில் இக்கூற்றை விளக்குக.

(12 புள்ளிகள்)

13.

i. முன்பள்ளியிலும் ஆரம்பக்கல்வி வகுப்புக்களிலும் கதைகூறல் மற்றும் நாடகம் ஆகியவற்றுக்காக பயன்படுத்தக் கூடிய பொருட்கள் அல்லது துணைச் சாதனங்கள் **ஐந்தினைப்** (05) பட்டியலிடுக.

(10 புள்ளிகள்)

ii. கதை கூறல் மற்றும் நாடகம் ஆகிய செயற்பாடுகளின் பொருட்டு மேற்கூறிய பொருட்கள் அல்லது துணைச் சாதனங்களை எவ்வாறு பயன்படுத்துவீர் என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -